விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | தை 10 | ஜ. அல் 12 | இதழ் 347
யாழ்ப்பாண | வியாழக்கிழமை | 23-1-1986

## பூரணகடையடைப்பு!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம்மீண்டும்நேற்று வெறிச்சோடிக் காணப்பட்டது வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு, பூரண கடையடைப்பு நடந்தது. யாழ். மாநகர வர்த்தகசங்கம் விடுத்துள்ளவேண்டுகோளுக்கமையவே கடையடைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக்காலை யாழ். குடாநாட்டிலுள்ள சகல வர்த்தகர்களும, தொழிலாளர்களும் சேர்ந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு அருகாமையிலுள்ள மின்சார

(5-ம் பக்கம் பார்க்க)

### ஆஸ்பத்திரி ஊழியர்


## போர்க் கொடி!

[ஏ. வி. மாணிக்கம்]

யாழ்.கோட்டை இராணுவ முகாமை அகற்றுமாறுகோரி, யாழ். ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் சகல ஊழியர்களும் நேற்று நண்பகல் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தினர்கள்!

தங்கள் கோரிக்கைக்கு தகு

[5ம் பக்கம் பார்க்க)



யாழ். வர்த்தக சங்கத்தின் ஆதரவில் நேற்று நடைபெற்ற ஊர்வலம், கடையடைப்பின்போது. யாழ். வர்த்தகர்கள் ஊர்வலமாகச் செல்வதையும், யாழ். செயலகம் முன்பாக மறியல்செய்வதையும் கடையடைப்பினால் பஜார் வீதி வெறிச்சோடிக்கிடப்பதையும் இங்கு காணலாம்.

### ● போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அறிக்கை கோருகிறது

# தடுப்புக்காவல் கைதிகளுக்கு அரசியல்அந்தஸ்துவேண்டும்!

## வெலிகடையில் 218கைதிகள்; விடுதலைசெய்வதில் தாமதம்''

(கொழும்பு)

**பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின்கீழ் வெலிக்கடைச் சிறையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு, அரசியல் அந்தஸ்து வழங்கப்படவேண்டும் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வலியுறுத்தியுள்ளது.**

வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு கடந்த டிசம்பர்மாதம் ஆறும் திகதி போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் மேற்கொண்ட விஜயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் மேலும் காணப்படும் சில விபரங்கள் வருமாறு;

''பயங்கரவாத நடவடிக்கை தொடர்பாக வெலிக்கடைச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இருநூற்றுப்பதினெட்டு (218) கைதிகளைப் பார்ப்பதற்கென வரும் அவர்களது பெற்றோர்களுக்கும் உறவினர்களுக்கும் கூடுதலான நேரம் வழங்கப்படவேண்டும்.

கைதிகளை விடுதலை செய்வது தொடர்பாக ஆலோசனைசபை செய்துள்ள சிபார்சுகளில் அனேகமான வைதாமதப்படுத்

(5ம் பக்கம் பார்க்க)

## லெப்டினன்ட் பலி!

(கொழும்பு)

முல்லைத்தீவு-மாங்குளம வீதியில் திருத்தவலைகளில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை நேற்று முன்தினம் தீவிரவாதிகள் தாக்கியதால் ஒருவர் பலியானார்.

லெப்டினன்ட், ஜயந்த பெரேரா என்பவரே மேற்

[5-ம் பக்கம் பார்க்க]

### ---இந்திரா படுகொலை

## மூவருக்கும் மரணதண்டனை தீர்ப்பு

[புதுடில்லி]

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி படுகொலை வழக்கில் சம்பந்தப்பட்ட மூன்று எதிரிகளுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது!

இத்தீர்ப்பை நீதியரசர் மகேஷ் சந்திரா நேற்று புதுடில்லியில் வழங்கினார்.

திருமதி இந்திராகாந்தியின் முன்னாள் மெய்ப்பாதுகாப்பாளரான சத்வான்சிங் படுகொலையில் நேரடியாக சம்பந்தப்பட்டார் என்றும், மற்றைய இருவரும் இந்த படுகொலைக்கான சதியில் பங்கு பற்றினார்கள் என்றும் நீதிமன்றம் தெரிவித்தது.

(5-ம் பக்கம் பார்க்க)

## கட்டிடம் அமைப்பவர்களே!

### கட்டிடக்கலை மாணவர்களே!

மனோகரன் அன் வெற்றிவேல் ஸ்தாபனமும்
J. C. C. LTD. ம் இணைந்து 25-01-1986

சனிக்கிழமை வெளியாகும் ''Saturday Review'' ஆண்டு மலரில் கட்டிட அமைப்புச் சம்பந்தமாகப் பல முக்கிய தகவல்கள் அடங்கிய ஓர் அனுபந்தம் வெளியிடுகிறார்கள். கட்டிடம் அமைப்பவர்கள், கட்டிடக்கலை பயில்பவர்கள் இந்த அனுபந்தத்தைத் தவறாது வாங்கிப் படித்துப் பயன் பெறுவதுடன், படித்த பின்னர் கட்டிட அமைப்புச் சம்பந்தமான எமது அனுபந்தம் பற்றிய அபிப்பிராயங்களை அல்லது ஆலோசனைகளை எமக்கு அனுப்பிவைக்குமாறு பணிவுடன் வேண்டுகிறோம.

மனோகரன் அன் வெற்றிவேல் | J. C C, LTD.
53, கண்டி வீதி, யாழ்ப்பாணம், | உரும்பிராய் சந்தி, உரும்பிராய்.

[C 339]

### 25 அரச அலுவலகங்கள் நேற்று ஸ்தம்பித்தன

## மறியல் போராட்டம் இன்றும் தொடருகிறது!

(யாழ்ப்பாணம்)

இருபத்தைந்து வருடங்களுக்குப் பின்னர், நேற்று யாழ்.கச்சேரிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட மறியல் போராட்டத்தினால். யாழ். அரசாங்க செயலகம், பனம்பொருள் கூட்டுத்தாபனம், தேர்தல் காரியாலயம் உட்பட சுமார் 25அரசாங்க காரியாலயங்கள் முற்றாக ஸ்தம்பித்தன.

கச்சேரிக்கு வந்திருந்த உதவி அரசாங்க அதிபர்களும உத்தியோகத்தர்களும் மற்றும் ஊழியர்களும், காரியாலயங்களுக்குசெல்ல முடியாது திரும்பிச்சென்றனர்,

[5-ம் பக்கம் பார்க்க]

# அரி விளம்பரம்

## தேவை

புதிதாகத் தொடங்கவிருக்கும்ஆங்கிலசுருக்கெழுத்து,தட்டெழுத்து மற்றும் வர்த்தக வகுப்புகளுக்கு அனுபவமுள்ள ஆசிரியைகள் தேவை. இப்போதைய தொழில், எதிர்பார்க்கும் சம்பளம் உட்பட எல்லா விபரங்களுடன் உடனே விண்ணப்பிக்கவும். விபரங்கள் அனைத்தும் இரகசியமாகவைத்திருக்கப்படும். தொடர்பு: விளம்பர இல. C 305 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 305)

மினி சினிமா ஒன்று திறப்பதற்கு ஒரு சிறிய ஹோல் (Hall) 60' X 40' அல்லது வீடு யாழ். மாநகரசபை எல்லைக்குள் தேவை. விளம்பர இல. C 308, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 308)

பாவித்த சோதனைப் பேப்பர்கள், பழைய கொப்பிகள் தேவை. தொடர்பு கொள்ளவும்: அண்ணா இண்டஸ்ரீஸ், இணுவில். [A 112]

## விற்பனைக்கு

ஒலிப்பதிவு செய்யப்பட்ட கசெற் - நர்சரி றைம்ஸ்; (ஆங்கிலம், தமிழ்) கனகதாராஸ் தோத்திரம் - பொன் நெல்லிக்கனி மழை பொழிய ருளப்பட்டது; எம் எஸ். சுப்புலட்சுமி பாடியது. - பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [C332]

அம்மன்வீதி திருநெல்வேலி மேற்கில் சகல வசதிகளுடனும் கூடிய வீடுவளவு விற்பனைக்குண்டு. உடன்தொடர்பு கொள்ளவும். விபரங்களுக்கு: எஸ். கனகரட்ணம், 547, பருத்தித்துறை வீதி, நல்லூர். [C338

கட்டுடைச் சந்தியிலிருந்து நவாலி போகும் பாதையில் வீடமைப்பு திட்டத் திற்கும் கட்டுடைச் சந்திக்கும் இடையில் விலாசமான காணிதனிக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விலை பரப்பு எண்ணாயிரம் (8000/-). விளம்பர இல: C321, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் [C321]

தெல்லிப்பளை புகையிரத நிலையத்துக்கருகாமையில் 3 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு M. சிதம்பரநாதன், Attorney at Law, தெல்லிப்பளை. [C322]

Bairaha Farms புறொயிலர் இறைச்சிக் குஞ்சுகள் 28ந்திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (C 53)

## சேவை

போட்டோ கொப்பிகள், டுப்பிளிக்கேற்றிங் மெசின் யப்பானில் எலற்றோனிக் என்சினியரினால் சிறந்தமுறையில் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். தொடர்பு: சி. எஸ். சி. டேவ், 65, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். [C 335]

## வகுப்புகள்

G S.Q (Bio) [Botany, Zoology. Chemestry) நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. G.S Q (Maths) (Pure, Applied, Statistics, Chemistry, physics) விரைவில் ஆரம்பமாக உள்ளன. செய்முறைப்பயிற்சிகளுக்கு ஏற்ப சிறந்த முறையில் விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கப்பட்டுள்ளது. சேரவிரும்புவோர் நேரில் வந்து காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ளவும்: அதிபர், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [C325]

Home Science Diploma (மனையியல் டிப்ளோமா Stenography (Shorthand Typing English) நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. Montessory Diploma Teachers Taining (பாலர் பயிற்சி) ஆரம்பமாகவுள்ளது. Recognised Certificates will be issued. சேரவிரும்புவோர் நேரில் வந்து காரியாலயத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளவும்: அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். [C326]

108, Brown Road, Jaffna A/L 88 இரசாயனம். ஆசிரியர்: சத்தீஸ். ஆரம்பம்: 26-01-86 (ஞாயிறு) 06-30 a. m. (சனி, ஞாயிறு 06-30 a. m.) பிரிவு II ஆரம்பம்: 27-01-86 நேரம் 4-45 p. m. (திங்கள், புதன் 4-30 p. m.) C 315)

## மணப்பந்தல்

கோவியகுலப் பெற்றோர் லண்டனில்தொழில்புரியும் சட்டடதொழில்நுட்பஅதிகாரிக்கு அழகும், கல்விஅறிவும், நற்பண்புகளும் உடைய மணமகளை எதிர்பார்க்கிறார்கள். வயது 24-36 இடைப்பட்டவராகவும், சீதனமாக போதிய நகையும், ரொக்கமும் விரும்பப்படும். சாதி-சமயம் பார்க்கப்படமாட்டாது. புகைப்பட பிரதியுடன் 01-02-86 க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: C 334, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 334]

MATRIMONIAL

• Jaffna Tamil, Permanent resident in Singapore. working as Director and Secretary of English [Company, seeks matrimony with well educated Jaffna Tamil girl preferrably doctors or graduates aged 30 to 35. Parents please write with a recently taken photograph. Apply Advt. No 329, C/o Eelanadu, Jaffna. (C 329)

**வியாபாரம் பெருக**

**விளம்பரம் செய்க**

## வாடகைக்கு

சகல வசதிகளுடன் நாவலர் வீதியில் அமைந்துள்ள 4அறைகள் கொண்ட வீடு ஒன்று வாடகைக்குண்டு. தொடர்பு: 15⁵ (114), நாவலர்வீதி, யாழ்ப்பாணம். (C 314)

## தவறிவிட்டது

Brown நிறமுடைய பாக் [Bag] ஒன்றுக்குள் E 107591 இலக்கமுடைய பாஸ்போர்ட்டும் விமான டிக்கட் ஒன்றும் 18-1-86இல் கொழும்பிலிருந்துவந்த யாழ்தேவி வண்டிக்குள் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் C. கோபாலச்சாரி, மடத்தடி, மாவிட்டபுரம், தெல்லிப்பளை. என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [C309]

**நன்றி நவிலலும் சபிண்டீகரண**

**அழைப்பும்**

அன்புடையீர்,

24-12-1985-ல் சிவபதமடைந்த வைத்திய சிரோன்மணி பொன்னையா சிதம்பரநாதனின் மகன் திருப்பரங்கிரிநாதனின் சபிண்டீகரண கிரியைகள் [23-01-86] வியாழக்கிழமை அராலி மேற்கு வட்டுக்கோட்டையிலுள்ள எனது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நலன்விரும்பிகள் அனைவரும் இவ் ஆத்மசாந்திக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புரிமையுடன் வேண்டுகிறேன்.

அன்னாரது இறுதிக்கிரியைகளில் பல்வேறு வகையிலும் உதவிகள் புரிந்தும், ஆறுதல் கூறியும், மலர்வளையங்கள் சாத்திய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வண்ணம்,

சிதம்பரநாதன்

குடும்பம்.

அராலி மேற்கு,

வட்டுக்கோட்டை.

C 330

# தேயிலையில் நஞ்சு:

## சிங்கள இயக்கம் எச்சரிக்கை

[கொழும்பு]

''இந்தியத் தேயிலையில் நஞ்சு கலக்கப்படும்'' என்ற வாசகங்களைக் கொண்ட கடிதங்கள் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இயங்காத இரகசிய சிங்கள இயக்கமொன்று இக் கடிதங்களை மேற்படி தூதுவராலயங்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இருக்கும் நல்லுறவைப் பாதிப்படையச் செய்யும் நோக்கில் இக்கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது.

இலங்கைத் தேயிலையில் நஞ்சு கலக்கப்பட்டுள்ளது என்ற பிரசாரத்துக்கு பதிலாக மேற்படி சிங்கள இயக்கம் இந்திய தேயிலையில் நஞ்சு கலக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

**31-ம் நாள் நினைவஞ்சலி**



அமரர் நடராசா தணிகாசலம்

தோற்றம்: 26-10-1931
மறைவு: 24-12-1985

துன்ப இருள் நீக்கும் வெண்ணிலவே நீதூரதேசம் சென்றனையா, உன் மறைவால் வாடும் மலர்கள் நாம். உமைக்காண ஏங்குகிறோம். எத்தனை காலம் சென்றாலும் எம் இதயத்தைவிட்டு நீங்காத நினைவுடனே இத்தரணியில் துயர்கடலில் மூழ்கும் நாம் யாரிடம் ஆறுதல் பெறுவோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக 23-01-86ல் எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்கள் சகோதரி, உறவினர். (A 312)

**E. C E. Part-II**

(Electronics and Mechanical)

Director, Jaffna College Technical Institute wish to meet all Students and Lecturers of E. C. E- Part II course at 10-00 a. m. on Saturday 25th Jan. 1986 at

**St. JOHN'S ACADEMY,**

Chunduliku, Jaffna.

DIRECTOR.

(A 117)

**31-ம் நாள் நினைவஞ்சலி**



பர்ணந்து மரியாமபிள்ளை

மலர்வு: 8-9-1917
உதிர்வு; 23-12-1985

எங்கள் கலங்கரை விளக்கணைந்து நாம் திசைமாறிய பறவைகளானோம் ஐயா. ஒரு மாத காலம் ஓடி மறைந்தாலும் உங்கள் அன்பும் நினைவும் எங்கள் மனதில் என்றும்மறையாது. அன்புடன் அழியா இன்ப நினைவுகளை மீட்டு வருந்துகிறோம், பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஈமக் கிரியைகளில் பங்குபற்றியவர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பி ஆறுதல் அளித்தவர்கள் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மனைவி, மக்கள். மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

''அன்பகம்''
தாளையடி. [C 291]

# விக்னு டியூசன் சென்றர்

**52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

(வடமாகாணத்தில் O/L வகுப்புக்களுக்கு தனித்துவம்வாய்ந்த ஒருநிறுவனம்)

**O/L DAY CLASSES**
[8-30 a. m. — 1-30 p. m]
**ஆரம்பம்: 27-1-86**

கணிதம் - திரு. தயாபரன்
விஞ்ஞானம் - திரு. ரவி

மற்றும் திறமையான ஆசிரியர்களினால் போதிக்கப்படுகிறது.

குறிப்பு:

பாடசாலையில் கல்வி பயில அனுமதி கிடைக்கவில்லையே என்ற கவலை வேண்டாம். எமது நிறுவனம் அந்தக் குறையை நிச்சயம் நிவர்த்தி செய்யும். (A 111)

## தென்யேமன் நிலைமை மோசம்

# தூதரகங்களுக்குள் வெளிநாட்டவர் தவிப்பு!

## மீட்பு முயற்சியில் 'பிரிட்டானியா'

ஏடன், ஜன-22

**தென் யேமனில் பிரெஞ்சு, சோவியத் தூதரகங்களுக்குள் சுமார் 300 வெளிநாட்டுப் பிரஜைகள் தஞ்சமடைந்துள்ளனர். பாதுகாப்புத் தேடி அத்தூதரகங்களுக்குள்ளிருக்கும் இந்த 300 பேரையும் அவர்களது நாடுகளுக்கு அனுப்பிவைப்பதில் பலத்த சங்கடம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் அத்தூதரகங்களைச் சூழவுள்ள பகுதிகளில் பலத்த சண்டை நடக்கிறது.**

தென் யேமனில் இடம் பெற்றுவரும் இந்த ஒரு வார கால கடும் மோதலால் பாதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்கள் குறித்து சோவியத், பிரிட்டன் ஆகியன பெருங் கவலை கொண்டுள்ளன.

சோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்', தென் யேமன் நிலைமை படுமோசமான கட்டத்தை அடைந்துள்ளது. இங்கு அழிவுகள் பலமாக இருக்கலாம் எனத் தெரிவித்துள்ளது.

தென் யேமனில் சிக்கியுள்ள வெளிநாட்டவர்களைக் காப்பாற்றும் வகையில் பிரிட்டனின், 'பிரிட்டானியா' என்ற ஆடம்பரக் கப்பலும் ஏடன் துறைமுகத்துக்கு வெளியே நங்கூரமிட்டுள்ளது.

இந்தக் கப்பலின் காப்டன் ஏடனிலுள்ள வெளிநாட்டவரைக் காப்பாற்றத் தாம் எடுத்த முயற்சிகள் பல னளிக்கவில்லை எனக் கூறியுள்ளார். ஆயினும் அவர்களை எப்படியாவது காப்பாற்றும் பட்சத்தில் பாதுகாப்பாகக் கப்பல் ஏற்ற 'பிரிட்டானியா'வை ஏடனிலேயே தொடர்ந்து நங்கூரமிட்டு வைக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

[கி]

## நல்லூரில் மகா யாகம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உலகில் ஒற்றுமையும் சமாதானமும் சுபிட்சமும் லவ வேண்டி நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகை தேவி சமேத ஸ்ரீ கைலாய நாத சுவாமி தேவஸ்தானத்தில் (நல்லூர் சிவன் கோயில்) பேராசிரியர் பிரம்ம ஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் தலைமையில் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகும் மகா யாகம எதிர்வரும் 25 ம் திகதி சனிக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும்.

ஹோம நிகழ்ச்சி விபரம் வருமாறு:

இன்று காலை 5-00 முதல் கணபதி ஹோமம் நவக்கிரக ஹோமம், பிற்பகல் 2-00- ஸ்ரீ ருத்ரஹோமம், நாளை வெள்ளி காலை 5-00 பகவத் கீதாஹோமம், ஸ்ரீ சுதர்சன ஹோமம்: பிற்பகல் 2-00 துர்க்கா ஹோமம், சண்டி ஹோம பூர்வாங்கபூஜை சனிக்கிழமை காலை 5-00 சண்டி ஹோமம்: பிற்பகல் மாலை 4-00 - ஸ்ரீ சக்ரயாகபூஜை.

## உலகம் சுற்றும் 'கிருஷ்ணு!'

புதுடில்லி ஜன, 22.

இந்திய ராணுவத்தின் பொறியியல் பிரிவான 'கிருஷ்ணு' அணியினர் உலகம் சுற்றும்பயணம் ஒன்றை படகொன்றில் கடந்த வருடம் செப்டம்பர் மாதம்28ம் திகதி முதல் ஆரம்பித்துள்ளனர்.

இதுவரை சுமார்18,900கிலோமீற்றர் வரைஇவர்கள் பயணம் செய்துள்ளனர்.

இந்து சமுத்திரம், பசுபிக்சமுத்திரம், அரபிக்கடல் ஆகியவற்றையும் மொரிஷியஸ், மாலைதீவுகள், நன்னம்பிக்கைமுனை ஆகியவற்றைக்கடந்து அத்திலாந்திக் சமுத்திரத்தை அடைந்தனர். பின்னர் அங்கிருந்து பிறேஸில், சூரிநாம் ஆகிய நாடுகளைக் கடந்து தற்போது கரிபியன் நாடுகளை இவர்கள் அண்மித்துள்ளனர்.

இந்தப்படகில் இந்தியாராணு வத்தின் பொறியியல் பிரிவைச்சேர்ந்த பன்னிரண்டு வீரர்கள் பயணம் செய்கின்றனர். படகின் கப்ரன் தகவல் தருகையில், கப்பலும் பயணிகளும் நல்ல நிலையிலுள்ளனர் என்றார்.

[செ]

## புற்றுநோய் விடுதிக்கு 15ஏக்கர் காணி நன்கொடை

[யாழ்ப்பாணம்]

வடக்கு கிழக்கில் வாழும் புற்றுநோயாளரின் சௌகரியத்தைக் கருதி தெல்லிப்பளையில் புற்றுநோய் விடுதிஒன்றை நிறுவுவதற்காக, ஊரெழுவைச் சேர்ந்த கொடைவள்ளல் திரு. சு. தம்பிராசா 15 பரப்புக் காணியை வடமாகாண புற்றுநோய்ச் சங்கத்துக்கு நன்கொடையாக அளித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் வாழும் புற்றுநோயாளர் உகுந்த உபகரணங்கள் இல்லாமலும், மகரகமவுக்கு சிகிச்சைக்கு போக முடியாமலும் அவஸ்தைப் படுவதை முன்னிட்டு இச்சங்கம் இக்காணியில் புறறுநோய் விடுதி ஒன்றை நிறுவத்திட மிட்டுள்ளது. இதற்காகும் செலவானரூபா 20 லட்சத்தை சேகரிப்பதற்கு மக்கள் மனமுவந்து உதவி செய்ய வேண்டுமென சங்கம் கேட்டுள்ளது. வழங்கப்படும் பணத்துக்கு வரி விலக்குண்டு எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

## திருவையாறில் ராஜீவ் சாந்தி!

சென்னை, ஜன-22

'திருவையாறு' தியாகராஜ சுவாமிகள் உற்சவம் இம்முறை வழமைபோன்று விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது.

இந்திய மத்திய அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் எதிர்வரும் புதன்கிழமை இந்த உற்சவத்தைத் திருவையாற்றில் ஆரம்பித்துவைப்பார்.

பிரபல இசைக் கலைஞர்கள் எம். எஸ். சுப்புலக்ஷ்மி, வீணை வித்சுவான் சிட்டிபாபு ஆகியோர் இந்த உற்சவத்தில் இம்முறை முதன்மைக் கலைஞர்களாக இடம்பெறுகின்றனர்.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும் இத்தடவை உற்சவத்தில் கலந்துகொண்டு சிறப்பிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. திரு. காந்தி எதிர்வரும் 31ம் திகதி திருவையாறு வரவுள்ளார்.

[கி]

## கந்தபுராண படனம்

(யாழ்ப்பாணம்)

தைபூசத் திருநாளை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆனைக்கோட்டை மூத்த நயினர் ஆலயத்தில் கந்தபுராண படனம் இடம் பெறவுள்ளது.

பங்குனி மாதம் 25 ந் திகதி வரை தொடர்ந்து இடம் பெறவுள்ள இந்த நிகழ்ச்சியை திரு. அ.பெரியதம்பி, திரு. கு. பசுபதி ஆகியோர் முன்னின்று நடத்துவர்.

[ரா]

## அந்த நாள் நினைவுகள் நெஞ்சிலே வந்ததே ....

யாழ்ப்பாணக்கச்சேரிமுன்மறியல் இயக்கம் 20-01-61 திங்கட்கிழமை அதிகாலையில் தமிழரசுத் தந்தை செல்வநாயகம் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. 200 தொண்டர்கள் கட்சிப்பெயர் பொறிக்கப்பட்ட பட்டிகளை அணிந்துகொண்டு கச்சேரி வாசல்கள் எல்லாவற்றையும் தடுத்து வீற்றிருந்தார்கள். தேவார திருவாசகங்களையும், வேறு பக்திப்பாடல்களையும் கூட்டாகப் பாடியவண்ணமிருந்தனர். இந்த அறப்போர் அணியைக் காண்பதற்காக 3000க்கும் அதிகமான மக்கள் வீதிகளில் இருமருங்கிலும் சூழ்ந்து நின்றனர். ஆயினும் வாகனப் போக்குவரத்திற்கோ சனநடமாட்டத்திற்கோ ஒருசிறிதேனுந் தடை ஏற்படவில்லை. சத்தியாக்கிரகிகள், கட்டுப்பாட்டுடன் வீற்றிருந்ததில் வியப்பில்லை. ஆனால் பொதுசனங்கள் ஒழுக்கமாக நடந்து கொண்டது பெருமைக்குரியது.

சத்தியாக்கிரகிகள் கச்சேரிவாசலை அடைவதற்கு முன்பே கிட்டத்தட்ட 50 பொலிஸ் படையினர் இரும்புத்தொப்பி, குண்டாந்தடி துப்பாக்கி சகிதமாக கச்சேரிமுன் ரோந்து சுற்றித் திரிந்தனர். சுழல் துப்பாக்கியும், கண்ணீர்ப்புகை பரப்பும் சாதனமும் கூடவே இருந்தன. யாழ்ப்பாணப் பொலிஸ் அதிகாரியின் அறிக்கைப்படி 53 பொலிஸ்காரர்கள் அன்று கடமையாற்றினர். இவர்களில் 13 பேர் மாத்திரமே தமிழர்கள் என பொலிஸ் அதிகாரி கூறினார்.

### யாழ். கச்சேரிமுன் அன்று நடந்த மறியல்

காலை 10 மணிவரையில் யாழ்ப்பாண அரசாங்க அதிபரும் பொலிஸ் அதிகாரியும் கச்சேரி வளவிலிருந்து ஒரு ஜீப்பில் வெளிவரமுயன்றார்கள். வாசலில் மறியல் செய்த போராட்டக்காரர்கள் வழிவிட்டுக்கொடுக்கவில்லை இதனால் பொலிசார் குண்டாந்தடிப் பிரயோகத்தில் இறங்கினார்கள். 'வீரகேசரி' நிருபரின் வர்ணனையில்; குண்டாந்தடியால் அடிக்கும் சத்தமும் அதனால் உண்டான வேதனைக்குரலும் மாறிமாறி ஒலித்த யாழ்ப்பாணக் கச்சேரி வாசல்; சில சமயங்களில் பஜனைக்கூடமாகவும் காட்சியளித்தது. வலிதாங்கமாட்டாத சமயங்களில் எல்லாம் தொண்டர்கள் சிவநாமத்தை உச்சரித்து தேவார திருவாசகங்களைப் பாடினர் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து இணைந்தவண்ணம் தேசியகீதங்களை முழங்கியபோதெல்லாம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தூஷித்துக் கொண்டே அகப்பட்ட அங்கங்களைப் பிடித்திழுத்தார்கள். சில தொண்டர்கள் நிர்வாணமாக்கப்பட்டார்கள்......''

யாழ். அரசாங்க அதிபர் ஏறிவந்த ஜீப்பைத் தடுப்பதற்கு பருத்தித்துறை எம் பி. திரு. கே. துரைரத்தினம் முன்சக்கரத்துக்கு அணையாக தனது காலைத் கொடுத்தும் நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் கிடைத்த தாக்குதல்களை எல்லாம் பொருட்படுத்தாமல் சமாளித்ததும் மயிர்க்கூச்செறியும் சம்பவங்களாக இருந்தன. வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கத்தின் சட்டையைப் பொலிசார் துண்டு துண்டாகப் பிய்த்தெடுத்தார்கள். இத்தனைக்கும் சிகரம் வைத்தாற்போல, பொலிசாரின் மிதமிஞ்சிய தாக்குதலுக்கு இலக்கானவர் நீர்கொழும்பைச் சேர்ந்த திரு பிரான்சிஸ் பெரேராவாவர். காலை 9. மணியிலிருந்து 12 மணிக்கிடையில் அவர் சுமார் 50 தடவைக்கு மேல் தரையில் இழுக்கப்பட்டார்.

இவ்வாறெல்லாம் மனித சுபாவத்திற்கு அப்பாற்பட்ட வகையில் நடந்தும். ...இரும்பு மனிதன் என்று வர்ணிக்கப்படும் டாக்டர் நாகநாதனிடம் பொலிசாரின் குண்டாந்தடி தோற்றுவிட்டது. அவர் மீது ஓங்கிப் பல தடவை ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் அடிக்கவே, அதைத் தாங்க முடியாமல் குண்டாந்தடி இரண்டாக முறிந்தது. அதன் கைப்பிடிப் பக்கத்தை அந்த இரும்பு மனிதன், ஒரு ஞாபகார்த்தப் பொருளாகத் தன்னுடன் வைத்துக்கொண்டார்.

### கண்ணீர்ப் புகையும் துப்பாக்கி வேட்டும்

பொலிசார் ஒருவித எதிர்ப்புமின்றி சாத்வீக முறையில் தரையிலே வீற்றிருந்தவர்களையும், படுத்திருந்தவர்களையும் அரிசி மூடைகளைத் தூக்கி எறிவதுபோல் தலையிலும் கால்களிலும் பிடித்துத் தூக்கித் தூக்கி எறிந்தார்கள் அழுக்கு நீர் ஓடுகின்ற வடிகால்களில் தொண்டர்களை வீசினார்கள். இது பயன்தராது விடவே குண்டாந்தடிப் பிரயோகத்தில் மும்முரமாக ஈடுபட்டார்கள். மண்டைகள் உடைந்தன; எலும்புகள் நொருங்கின; கைகள் முறிந்தன; தோள்பட்டைகள் இடம்பெயர்ந்தன. இரத்தம் கொதித்து ஆத்திரமடைந்த மக்கள் ஆரவாரித்தனர். சிலர் கற்களைப் பொலிசார்மீது வீசினர். பொலிசாரும் கற்களை மக்கள்மீது வீசினர். கல் மழை பொழிந்தது. பொலிசார் மும்முறை துப்பாக்கியால் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர் மக்கள் அசைந்தாரில்லை கண்ணீர்ப் புகை பலதரம் பொலிசாரால் தூவப்பட்டது. மக்கள் தளர்ந்தனர்; தொண்டர்கள் சோர்ந்தனர். கண்ணீர்ப் புகை சூழ்ந்தது. பொலிசார் வெற்றிப் பெருமிதத்தோடு தமது குண்டாந்தடிக் கைவரிசையை மீண்டும் அறிவற்று மூர்ச்சையடைய் தரையில் கிடந்த தொண்டர் மீது புதுத் தெம்போடு காட்டத் தொடங்கினர். தொண்டர்கள் பலர் உணர்ச்சியற்றுக் குற்றுயிராய்க் கிடந்ததால் அவர்களைத் தூக்கிஎறிவது இப்போது சற்று எளிதாகிவிட்டது வழி ஏற்படுத்தப்பட்டது. அரசாங்க அதிபர் ஜீப்பில் வெளியே வந்து மேலே சென்றார்.

(நன்றி: ஈழத்து அறப்போரும் உரிமை மறுப்போரும்)

(தொடரும்)

## மணிவாக்கு

ஒரு மனிதனுக்கு அவனது மனைவியைத் தவிர மற்ற ஒவ்வொரு பெண்ணும் எந்த வயதினளாக இருப்பினும், வாழ்க்கைத்தரம் எப்படியிருந்தாலும் அவள் தாயின் வடிவம் ஆவாள். இது நம் இந்துப் பண்பாட்டின் சிறப்பான அம்சமாகும்.

—கோல்வால்கர்.

# நமதுநோக்கு

# ஆபத்துக்குப் பாபமில்லையா?

அதர்ம எண்ணம் மனத்தில் தோன்றினால், 'நீ கெட்டுப்போகும் காலம் வந்துவிட்டது என்பதற்கு அது ஒரு அறிகுறி' என்கிறார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். சமூகரீதியில் நாம் நன்றாக உணரவேண்டிய உண்மை இது.

வியாழ மாற்றம் படிப்பதில் அதற்கேற்ற கிரியைகள் நிறைவேற்றுவதில் அதிக பலன் இல்லை. பறவைச் சாஸ்திரமும் பார்க்க வேண்டியதில்லை. எண் சாண் உடம்பிற்கு வயிறே பிரதானமென்று நடப்பவர்களுக்கு எண்சோதிடத்தால் தானும் என்ன பயன்?

கெட்ட எண்ணம் செயல் உருவம் எடுத்தபிறகே பிறருக்குத் தெரியும். மற்றவர்களுக்குத் தெரியுமுன் தன் நெஞ்சத்தின் எண்ணம் தனக்கு முதலில் தெரியும். வெறும் எண்ணமாக இருக்கும் பொழுதே அதனைக் கண்டு, ''இது நான் கெட்டுப்போவதற்கு அறிகுறி. நான் மட்டுமல்ல என்னைச் சார்ந்த சமூகமும் கெட்டுவிடும் என்று உணர்ந்து அபாயத்தினின்று விலகுவதற்கு வழிதேடு'' என்கிறார் தமிழ் முனிவர்.

தமிழ் மக்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் அபாயம் எந்தத் தமிழ் மகனுக்குப் புரியாத விடயம்? எதிரியின் வலையில் அகப்பட எவன் முற்படுவான்?

'முட்டையில் மயிர் பிடுங்கும் பண்பு' திராவிட மக்களின் தனித்துவம் என்றொரு நம்பிக்கை உண்டு; இது அவர்களின் சிறுமை என்று கொள்ளப்படுகிறது. சைவ சித்தாந்தம் என்ற பெரும் தத்துவத்தை மிக நுணுக்கமாக ஆராயும் பெருமையுடைய விற்பன்னர், அத்திறமையைக் கோணல் வழியிலும் பயன்படுத்தப் பின்னிற்காததே இச்சிறுமையின் காரணம்.

அதற்குத்தான் போலும் ஆண்டவன் சோதனைக்கு மேல் சோதனையை நடத்துகிறான். ''நாம் சிறுபான்மையர் என்ற அச்சமே; மானத்தை உயிரின் மேலாக மதித்துவந்த மக்களைத் தற்கொலை என்ற நிலைக்குத் தள்ளி வந்திருக்கிறது.

மானம் - துபோன்றது? அதனை எவ்வாறு காப்பாற்றவேண்டும் என்பதையும் வள்ளுவனார் நினைவூட்டத் தவறவில்லை.

தாம் இருக்கவேண்டிய நிலையில் இருந்தால் அழகு. அந்த நிலையை எந்தக் காரணத்திற்காகவாவது விட்டு நீங்கிச் சிறுமையில் இறங்கினால் தலையிலிருந்துகொண்டு அழகுகொடுத்த மயிர் தன் இடத்திலிருந்து நீங்கிக் கீழே விழுந்துவிட்டால் அவலட்சணமும் அருவருப்புமாகி விடுவதுபோல், அவமான நிலை கிட்டும்.

இரண்டாவது உலகமகாயுத்தம் நடைபெற்றபோது ஆங்கிலமக்கள் ஷேக்ஸ்பியர் தேசாபிமானம் பற்றி என்ன சொன்னார் என்று தடவிப் படித்தனராம்.

''இச்சிறு தீவை- வெள்ளிக்கடலில் பச்சைரத்தினக் கல் போல் மிளிரும் இந்த அசைக்கமுடியாத அரணை- எந்த எதிரியும் தாக்குவதற்குத் துணியமாட்டான்'' என்று எழுதிவிட்டார் ஷேக்ஸ்பியர்.

ஆனி மாதம் 1940ம் ஆண்டு ஆங்கிலமக்கள் பரக்க முழித்த காலம்; ஆயுதங்கள் பற்றாக்குறை. 1939 இல் ஜேர்மனிக்கு எதிராக ஆரம்பமான யுத்தத்தில் எங்கும் தோல்விகண்டது இங்கிலாந்து. 19 நாட்களில் உலகின் மிகத்திறமையான இராணுவத்தையுடைய பிரான்ஸை தோற்கடித்துவிட்டது ஹிட்லரின் படை. 1919ல் ஜேர்மனிக்கு நேர்ந்ததோல்விக்குப் பதிலடியாக் அமைந்த இந்த வெற்றியை பாரிஸில் நேரடியாகக் கொண்டாடினார் ஹேர் ஹிட்லர்.

விடயம் முடிந்துவிட்டதா? இங்கிலாந்தில் அடியெடுத்து வைக்கமுடியவில்லை; அமெரிக்காவில் அடைக்கலம் புகுந்த டிகால் பிரான்ஸை மீட்டு ஜனாதிபதியாகத்திகழ்ந்தார் ஷேக்ஸ்பியர் ஆங்கிலேயரைத் தப்பவைத்ததாயின் எமக்கு பாரதியார் பயன்படமாட்டாரா?

அதேசமயம் ஆபத்தான காலத்தில் 'வெந்த வீட்டில் பிடுங்கினதறுதி' என்றுகொள்ளும் சமூக விரோதிகளும் உண்டு. அவர்கள் தமக்கும் சமூகத்துக்கும் கேடுவிளைவிப்பவர்கள். அவர்களின் செயல்கள் வெற்றியிற் முடிவதில்லை.

தருணத்தைப் பயன்படுத்திதம்மைஉயர்த்தலாம். அல்லது தமது திட்டங்களை நிறைவேற்றலாம் என்றவர்கள் ஒரு சாரார், இதுதான் நல்ல தருணம். மக்களுக்கு நன்மை பயக்கும் செயல் இது என்று வஞ்சனையின்றி அதேசமயம் உள்ளுணர்வின்றி தவறாக நடப்பவர்கள் இன்னொருசாரார்.

எப்போது நூற்றுக்கு நூறுஒற்றுமைவேண்டுமோ அப்போது அதனைத் தம் சூழ்ச்சியால், தவறான கருத்துக்களால் —மடமையாலும் கெடுத்துவிடும் பேர்வழிகள்.

'சற்றே விலகியிருங்கள்' என்று அவரை நாம் எச்சரிப்போமாக.

வாழ்வதா சாவதா? என்ற இக்கட்டு இன்றுபோல என்றிருந்தது. எனவே ஏனிந்த நியாய மற்றபிடிவாதம்?—நாவலர் சிலை, தனியார் மருத்துவக் கல்லூரி, யாழ். நகரச் செயலகம்— இவையெல்லாம் உயிருக்கு வாதாடும் மக்களுக்கு உட்பகை வளர்க்கும் சர்ச்சைகள்?

எனவே இவை பற்றிய கருத்தரங்குகளுக்கும் கருத்துப் பரிமாறல்களுக்கும் இன்றுபாபமில்லை என்று சொல்ல யார் துணிவார். ஆபத்துக் காலத்திலும் பாபம் புண்ணியம் என்ற பாகுபாடு உண்டல்லவா?

### யாழ்ப்பாண பாதுகாப்பு வலயம்

# 25 ஆயிரம் ஊழியர்களைக்கொண்ட 5000 வர்த்தக நிலையங்கள் உள்ளடங்கும்

## யாழ். வர்த்தக சங்கத்தலைவர் மகஜர்

[யாழ்ப்பாணம்]

''அரசாங்கம் யாழ். நகரில் அமுல்படுத்தியுள்ள பாதுகாப்பு வலயம் 5000க்கு மேற்பட்ட பெரிய-சிறிய வர்த்தக நிலையங்கள் உள்ளடங்கியதாகவும், 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஊழியர்கள் கடமைபுரியும் பகுதியான யாழ். நகர வீதிகளை உள்ளடக்கிய பகுதியாகவும் இருக்கின்றது''.

இவ்வாறு யாழ். வர்த்தகர்கள் சங்கத் தலைவர் திரு. ச. வி. முருகேசு, 'யாழ்ப்பாணம் கோட்டையைச் சுற்றி ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயம்' சம்பந்தமாக ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்து ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மகஜரின் பிரதிகள் யாழ். அரசாங்க அதிபர்மூலம் பிரதம மந்திரி, பந்தோபஸ்து அமைச்சர், அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், யாழ். பிரிவு முப்படைத் தளபதி, வர்த்தக கப்பல்சேவை அமைச்சர், இந்திய-இலங்கை உயர் ஸ்தானிகர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''யாழ்ப்பாணம் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், முகாமையாளர்கள் தொழில் அதிபர்கள் அனைவரும் அரசாங்கம் யாழ்ப்பாணக் கோட்டையைச் சுற்றி 1000 மீற்றர் எல்லைப் பிரதேசத்தை பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தியதைக் கீழ்க்கண்ட காரணங்களுக்களுக்காக வன்மையாக ஆட்சேபிக்கின்றோம்.

அரசாங்கத்தின் இந்தத் திடீர் முடிவினால் கோட்டையைச் சுற்றி 1000 மீற்றர் எல்லைப் பிரதேசத்திற்குள் பாதுகாப்புப் படையினர் மோட்டார் பீரங்கிகள் மூலம் குண்டுகள் செலுத்தி தாக்கலாம் என்ற உத்தரவு இப்பிரதேசத்திற்குள்ளும் அருகாமையிலும் வாழும் சகல மக்களின் உயிருக்குப் உடைமைக்கும் தீங்கு விளைவிக்கக் கூடிய செயலாகும்.

குறித்த அரசாங்கத்தின் உத்தரவு யாழ்ப்பாண வர்த்தக நிலையங்கள் அடங்கிய கேந்திர ஸ்தானமான யாழ்ப்பாண பட்டினத்திலாகும். யாழ்ப்பாண பட்டினம் யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கே தேவையான சகலவற்றையும் பெறக்கூடிய பட்டினமாகும்.

இந்த பாதுகாப்பு வலயம் 5000க்கும் மேற்பட்ட பெரிய, சிறிய வர்த்தக நிலையங்களை உள்ளடக்கியதாகவும், 25,000க்கு மேற்பட்ட ஊழியர்கடமைபுரியும் பகுதியான காங்கேசன்துறை வீதி, ஆஸ்பத்திரிவீதி, மின்சார நிலையவீதி, கஸ்தூரியார்வீதி, கன்னாதிட்டிவீதி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய்வீதி, பிரதானவீதி, கடைத்தெரு ஆகியவற்றை உள்ளடக்கியதாகவும்உள்ளது.

இந்த பாதுகாப்பு வலயத்திற்குள் அடங்கியுள்ள வர்த்தக ஸ்தாபனங்கள், நீதிமன்றங்கள், தலைமை அஞ்சல் நிலையம், யாழ்ப்பாண ஆஸ்பத்திரி, தொலைத்தொடர்பு நிலையம், கேந்திர பஸ்நிலையம், பெரிய சிறிய கல்லூரிகள், வங்கிகள் தனிப்பட்டவைத்திய சிகிச்சை நிலையங்கள், பெரிய சிறிய கைத்தொழில் நிலையங்கள் ஆகியவை, நடைபாதை வியாபாரங்கள் போல் பாதுகாப்பு வலயத்தைவிட்டு வெளியேற முடியாது என்பதைத் தாங்களும், தங்கள் அரசாங்கமும் தெட்டத் தெளிவாக அறிவீர்கள்.

''எமது வர்த்தகசங்கத்தைப் பொறுத்தளவில் பெரும் பகுதியினர் தென்இலங்கையில் தொழில் புரிந்து அங்கு வகுப்புக் கலவரங்களினால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணப் பட்டினத்திற்கு வந்து மிகுந்த சிரமங்களின் பேரில் தமது வர்த்தக நிலையங்களை சொந்தக் கட்டிடங்களிலும், வாடகைக் கட்டிடங்களிலும் நிறுவி மக்களின் தேவைகளைக் கவனித்து வருகின்றார்கள். இன்னும் குறித்த பகுதியில் அத்தியாவசியப் பொருட்களை மக்களின் தேவைக்காக சேமித்து செயல்பட்டு வருகின்றோம்.

வர்த்தகத்தை மக்களின் தேவைக்கேற்பச் செயற்படுத்துவதற்குக் குறித்த ஸ்தாபனங்கள், வங்கிகள், தொலைதொடர்பு நிலையங்கள், அஞ்சல் நிலையங்கள் ஆகியவற்றிற்கருகாமையில் செயற்படவேண்டுமென்பதைத் தாங்கள் அறிவீர்கள். இன்னும் குறித்த ஸ்தாபனங்கள் பிரதான வீதிகளுக்கு அருகாமையில் அடுக்கடுக்காக நிர்மாணிக்கப்பட்டு இயங்குவதற்குக் காரணம் பொருட்களை ஏற்றி இறக்குவதற்காகவே. எமது வியாபாரம் முக்கியமாகப் பிரதான பஸ் போக்குவரத்து நிலையம் அமைந்துள்ளதற்கு அருகாமையில் இருப்பதாகும். இவற்றையெல்லாம் இழந்து பிறிதொரு இடத்தில் புதிய பட்டினம் அமைக்க முடியாத நிலையில் இடமாற்றம் செய்வதென்பது முடியாத காரியமாகும்.

தாங்களும், தங்கள் அரசாங்கமும் எமக்கும் எமது மக்களுக்கும் மாற்று இடமும் கட்டிடங்களும் இந்தப் பாதுகாப்பு வலயத்திற்கு அப்பால் நிறுவித் தராது இப்பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளியேறுவது முடியாத செயலாகும். அப்படியொரு மாற்றுத்திட்டம் உருவாகிய பின்னரே நாங்கள் வெளியேறலாம். எனவே யாழ்ப்பாணம் கோட்டையிலிருந்து பாதுகாப்புப் படையினரை பிறிதொரு இடத்திற்கு அப்புறப்படுத்தி, செயல்படுத்தி எம்மையும் எமது மக்களையும் பாதுகாத்துத் தருமாறு வேண்டுகின்றோம். [மா]

# மார்க்க பணிபுரிந்து

## உயர்வாழ்க்கை வாழ்ந்த பெருமகன்

அல்ஹாஜ் மர்ஹூம் முகம்மது இபுறுகீம் முகம்மது மீரான் முகிதீன் ஆலீம் - ஜே. பி. அவர்களின் முதலாண்டு நினைவுதினம் இன்றாகும். பள்ளிகாத்தல் பணியைப் பல்லாண்டு காலமாய்ச் செய்து உயர் வாழ்க்கை வாழ்ந்த இறைதொண்டர் முகம்மது இபுறுகீம் அவர்களுக்கும், சுல்தான் முகிதீன் நாச்சியா அவர்களுக்கும் ஒரே செல்வமாக 1900 மாம் ஆண்டு ஆனித்திங்கள் இருபத்தெட்டாம் நாள் மீரான் முகிதீன் அவர்கள் பிறந்தார்கள்.

'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்ற முதுமொழிக்கொப்ப இளவயதிலேயே அவருக்கிருந்த மார்க்க ஞானம் காரணமாக அவரது தந்தை முகம்மது இபுறுகீம் அவர்கள் உயர்கல்வி பெறுவதற்காக 1916-ம் ஆண்டில் அன்னாரின் பதினைந்தாவது வயதில் காயல்பட்டினம் ஜமாலிய்யா அறபுக் கல்லூரிக்கு அனுப்பி வைத்தார்கள்.

அன்னார் யாழ்ப்பாணத்திலிருந்து செல்லுமுஸ் ஒழுக்கமும் உயர் பண்பும், இறைபக்தியும் நிறைந்து விளங்கிய சுல்தான் முகிதீன் நாச்சியா [பெத்தம்மா] என்னும் பெண்ணை திருமண மங்கையாக்கி உற்றார் பலரும் வாழ்த்துரை கூறத் திருமணம்செய்து வைத்தனர்.

ஆலிம் அவர்கள் திருமணமாகி சில தினங்களில் காயல் பட்டினத்துக்கு பயணமானார்கள். அங்குமுறைப்படி அறபுக் கல்வி கற்று ஜமாலிய்யா என்னும் பட்டம்பெற்று பின்னர் மெட்ருஸ் வந்து இஸ்லாமிய சட்டதிட்டங்களைக் கற்றுத் தேறி வேலூரிலுள்ள மதுரஸாவில் ஆலிம்பட்டம் பெற்றபின்னர் 1921-ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்கள்.

யாழ்ப்பாணம் வந்து சில நாட்களில் கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் ஆசிரிய நியமனம் பெற்று சில காலம் சேவை செய்தார்கள் ஆலிம் அவர்களின் ஆற்றலை அறிந்த அப்போது முஸ்லிம் வட்டாரத்தில் மார்க்க கல்வி நிறுவனமாக இருந்த மன்ப உல் உலூம் மத்ரஸாவின் நிர்வாகிகளான ஜனாப் எம்.எம். அபூபக்கர் ஜே. பி. சட்டத்தரணி அவர்களும் பிரபல வர்த்தகர் ஜனாப் எம். ஓ.எம். எஸ். அப்துல் காதர் அவர்களும் ஆலிம் அவர்களை மன்ப உல்உலூம் மத்ஸாவின் பொறுப்பாசிரியராக நியமித்தனர் இம் மத்ரஸாவில் ஆலிம் அவர்கள் சுமார் நாற்பது ஆண்டுகாலம் நல் ஆசிரியனாக கடமையாற்றினார்கள். இன்று யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களில் பெரும்பாலானவர்கள் ஆலிம் அவர்கள் மூலமாகவே அறபுக்கல்வியும், மார்க்கக்கல்வியும் பெற்றுள்ளார்கள் என்பது தெளிவு

### காலத்துக்கேற்ற பிரசங்கங்கள்

மன்ப உல் உலூம் மத்ரஸாவில் ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்திலேயே அதன் அருகே இருக்கும் முஹியித்தீன் பள்ளிவாசலின் பேஷ் இமாமாக நியமிக்கப்பட்டார். அன்னாரது குரலினிமை காரணமாக ஐவேளைத் தொழுகையின் அவ்வல் வக்தின்போது பெருந்தொகையானோர் அன்னாரைத் தொடர்ந்து [மஃமூம்களாக] தொழுவார்கள். ஒவ்வொரு தொழுகையின் பின்னரும் செவிக்கினியதாக சன்மார்க்க போதனைகளை நடாத்தத் தவறமாட்டார்கள். மக்களின் அன்றாட வாழ்க்கையில் இஸ்லாத்துக்கு முரணான எத்தனையோ கருமங்கள் பொதுப்படையாக செயல்படுகின்றன. அவ்வப்போது அவற்றைச் சுட்டிக்காட்டி முஸ்லிம்கள் சீர்திருந்தும் முறையில் அன்னாரின் போதனைகள் அமைந்து காணப்படும். சிலகாலம் ஆலிம் சாகிபு அவர்கள் யாழ்ப்பாணம் பெரிய பள்ளிவாசலில் குத்பாப் பிரசங்கங்களையும் ஆற்றினார்கள். வாராந்த குத்பாப் பிரசங்கங்கள் நடைபெறும் தவறுகளை அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவைகளாகவே அமையும். பழைய பல்லவிகளை விட்டு தற்காலத்திற்கேற்றவகையில் குத்பாத் பிரசங்களை அமைத்து சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். அன்னார் சிலகாலம் ஐதுறூஸ் மகாம் வீதியில் அமைந்துள்ள மஹ்ழருள் ஐதுறூஸிய்யா பள்ளியிலும் பேஷ் இமாமாக இருந்துள்ளார்கள். இப்பள்ளியில் வாராந்தம் திக்றுமஜ்லிஸ் போன்றவைகளை நடாத்தி வந்தார்கள்.

இவர் குர்ஆன்ஓதுவதும்சொற்

(7-ம் பக்கம் பார்க்க)

## இந்திரா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து இவர்கள் சார்பில் மேல்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்போவதாக எதிரி தரப்பு வழக்கறிஞர் கூறினார்.

இந்தத்தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னர் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த சத்வான்சிங்; திருமதி இந்திரா காந்தியைக் கொலைசெய்தவர்கள் யார் என்பது தமக்குத் தெரியும் என்றும் உரியவேளையில் இது பற்றி அறிவிக்க எண்ணியிருப்பதாகவும் கூறினார். [பி]

## மார்க்க பணி...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

அல்லாஹ் அவர்களுக்கு உயர்ந்த கண்ணியத்தை அளித்துள்ளான்.

1966ம் ஆண்டில் ஆலிம் சாகிபு அவர்கள்முஸ்லிம்களின் இறுதிக் கடமையான ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்காக மக்கா சென்றார்கள். அவ்வேளையில் அநேக ஹஜ்ஜாஜிகளை தமது இனிய நண்பர்களாக்கிசென்ற இடமெல்லாம் சிறப்புப்பெற்று விளங்கினார்கள்.

எழுபதுக்குமேற்பட்டபேரப் பிள்ளைகளையும் பூட்டப்பிள்ளைகளையும் பெற்ற ஆலிம்சாகிபு அவர்கள் நோயுற்று இருந்த போதும் அவர்களது நிலைதளரவில்லை. உறுதியான நடை உறுதியான பேச்சு உடையவர்களாகவே இருந்தார்கள். அன்னார் தனது இறுதிக்காலம் வரை ஓர் உன்னதமான மார்க்க அறிஞராகவும் உலமாசபைத் தலைவராகவும், குவாசி நீதிமன்ற [இஸ்லாமிய நீதி மன்று] பிரதம ஜூரராகவும் யாழ் மாவட்ட தம்லீஃ ஜமாஅத்தின் தலைவராகவும் சர்வமத சங்கத்தின் உறுப்பினராகவும் யாழ்மாவட்ட ஹிஜ்ரா கமிட்டியின் தலைவராகவும் யாழ் வை எம். ஏ.யின் போஷகராகவும் பதவி வகித்துள்ளார்கள்.

இத்தனை சிறம்பும் மகிமையும் அன்புள்ளமும் கொண்ட ஆலிசாகிபு அவர்கள் இவ்வுலகை விட்டும் ஏன்நம்மைஎல்லாம் விட்டு 1985ம் ஆண்டு பெப்ருவரி மாதம் மூன்றும் திகதி [ஹிஜரி 1405 ஜமாஅதுல் அவ்வல் 12ல்] ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் இறைவன் பால் அழைக்கப்பட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹிராஜிவூன் இறைவனின் கொடையாக தியாகச்சுடராக விளங்கிய அன்னாரின் ஆத்மா 'பிர்தௌஸ்'என்னும் சுவனபதியை அடையவேண்டுமெனஎல்லாம் வல்ல அல்லாஹவை வேண்டிக் கொள்வதே அன்னார் விட்டுச் சென்ற பணிக்கு நாம் அளிக்கும் நன்றிக் கடனாகும்.

எஸ்.ஏ.ஸி மஹ்ரூப் ஏ.காதர்,
செயலாளர்
யாழ். மாவட்ட ஹிஜ்ரா கமிட்டி.


**எம்பயர் திரையில்**

10-30, 2-30, 6-30
சிவகுமார் - அம்பிகா
**மீண்டும் பராசக்தி**

**லிடோ சினிமா**

10-30, 2-30, 6-30
சிவகுமார்-லட்சுமி
ஸ்ரீபிரியா-தேங்காய்
மனோரமா
**அவன்-அவள்-அது**
(புதிய பிரதி கலர்)

**வெலிங்டன்**

10-30, 2-30, 6-30
M. G. R.—லதா
நடித்த
**நீதிக்கு தலைவணங்கு**
[புதிய பிரதி]


## ஆஸ்பத்திரி ஊழியர் போர்க்கொடி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ந்த நிவாரணம் கிடைக்காத த்தில் கடமைக்குச் செல்கும் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களாலும், யாழ். கோட்டை இராணுவமுகாமிலிருந்து ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட்டது குறிக்கும் யாழ். பெரியாஸ்பத்திரியில் கடமையாற்றும் வைத்திய நிபுணர்கள் தொடக்கம் சகல ஊழியர்களும் அச்சம் தெரிவித்துள்ளனர்,

நேற்று நண்பகல்ஆஸ்பத்திரி வீதியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை ஆஸ்பத்திரியில் உள்ள சகல ஊழியர்களும் மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

யாழ். கோட்டையிலிருந்து இராணுவத்தினர் வெளியேறும் வரை தாங்கள் கடமையாற்ற முடியாதென்ற கோரிக்கையை முன்வைத்தே யாழ் ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தினர்.

யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி இக்கோரிக்கை சம்பந்தமாக கொழும்பிலுள்ள உயர்அதிகாரிகளுடன் தொடர்புகொண்டிருந்தார்.

நாளை வெள்ளிக்கிழமை, யாழ். வை. எம். சி. ஏ.யில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள சகல அரச திணைக்களப் பிரதிநிதிகளும் எடுக்கும் தீர்மானத்தைப் பொறுத்தே யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்கள் தொடர்ந்து கடமையாற்றுவதுகுறித்து முடிவு எடுக்கப்படும்.

யாழ். ஆஸ்பத்திரியில் இரவில் கடமையாற்றும் சகலரும் தாம் எதிர்பார்த்திருக்கும் முடிவு கிடைக்காதபட்சத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை கடமைக்குச் செல்லமுடியாது என்று உறுதியளித்துள்ளனராம்.

## தடுப்புக்காவல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்படுகின்றன. சட்டமா அதிபர்திணைக்களத்திற்கும் பொலிசாருக்கும் இடையில் தொடர்புத்துறையில் ஏற்படும் நடவடிக்கைகள் தாமதங்கள் காரணமாகவே கைதிகள் விடுதலை, விசாரணைகள் தாமதப்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கல்வி வசதிகள்

''கல்வியை தொடரும் கைதிகளுக்கு வசதியாக பாடப்புத்தகங்கள், அப்பியாசக்கொப்பிகள் உட்பட கல்வி சம்பந்தமான வாசிப்பு உபகரணங்கள் வழங்கப்படவேண்டும். வானொலிச்செய்திகளை கேட்பதற்கு வசதிசெய்து கொடுக்கப்படவேண்டும்.

''விசேட மருத்துவ சிகிச்சை சம்பந்தப்பட்ட வரையில்குறிப்பாக மனநோய் சிகிச்சை பெற விரும்பும் கைதிகளுக்கு தாமதமின்றி சிகிச்சை வழங்கப்படவேண்டும். இத்தாமதங்களை உடன் கவனிப்பதாக சிறைச்சாலை ஆணையாளர் இணக்கம் தெரிவித்தார்.

### இலவச சட்ட ஆலோசனை

கைதிகள் தமக்கு சட்டத்தரணிகளை அமர்த்திக்கொள்ள முடியாதபட்சத்தில் இலவச சட்ட ஆலோசனை பெறுவதற்காக வழக்கை விசாரிக்கும் நீதிபதியிடம் விண்ணப்பம் செய்யலாம் இதன்பொருட்டு சட்ட உதவித்திட்டத்தின் சேவைகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு அரசியல் அந்தஸ்து வழங்கப்படவேண்டும்.

''கைதிகள் சார்பாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் சமயத்தில் கைதிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யக்கூடாது. கைதிகளை பெற்றோர்கள் அல்லது உறவினர்கள் பார்வையிடுவதற்கு கொடுக்கும் நேரம் 15நிமிடங்களாக அதிகரிக்கப்படவேண்டும். கைதிகளுக்கான மருத்துவ வசதிகள், கல்வி வசதிகள் யாவும் அதிகரிக்கப்படவேண்டும்'' [ச-ய]


சுன்னாகம்
பல. நோ. கூ. சங்கம்
(வரையுள்ளது) சுன்னாகம்.

**அறிவித்தல்**

சுன்னாகம் பல. நோ. கூ. சங்கத்தில் 5000க்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகளும், கழிவு சீனியும், கழிவுமாவும், கழிவு நவதானியங்களும், கழிவு அரிசியும், பாவிக்கப்பட்ட சிட்டைக் கடதாசிகளும் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச் சாக்குகளுக்கு ரூபா 250/-ம் ஏனையவற்றுக்கு ரூபா 50/-ம் மீளளிப்புவைப்புப் பணமாக சங்கத்தில் செலுத்தி சங்கவேலை நாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

30-1-86ந் திகதி நண்பகல் 12-00மணிவரையும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்.
சுன்னாகம் பல.நோ.கூ.சங்கம்,
சுன்னாகம்.
22-01-86 A-129


## 51 பேர் மீது விசாரணை

[கொழும்பு]

மட்டக்களப்பு இருதயபுரத்தில் கைதுசெய்யப்பட்ட 251 பேரில் 200 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்படாத 51 பேரிலும் விடுதலைப்புலிகள், தமிழீழமக்கள் விடுதலைக்கழகம், ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி, தமிழீழவிடுதலை ஸ்தாபனம், ஈழப்புரட்சி அமைப்பு ஆகிய தீவிரவாத இயக்கங்களைச் சேர்ந்த முக்கிய தீவிரவாத சந்தேக நபர்கள் இருப்பதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. [பி]

## மூன்றுவது நாளாக
# இராணுவம் - பொலிஸ் கூட்டுச் சோதனை

(வவனியா)

வவனியாவில் குருமன்காட்டுச்சந்தியிலும், வவனியா-மன்னார் வீதிச்சந்தியிலும் நேற்று மூன்றுவது தினமாக இராணுவத்தினரும், பொலிசாரும் இணைந்து சோதனைகளை மேற்கொண்டனர்.

அவ்வீதிகளால் வரும் இ. போ. ச. பஸ் உட்பட சகல வாகனங்களும் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டுவருகிறது. பாதசாரிகளும், சைக்கிளோட்டிகளும் கூடவழிமறிக்கப்பட்டு அவர்களது உடைமைகள் சோதனைக்குள்ளாக்கப்பட்டன.

இச்சோதனை அதிகாலை 4 மணி முதல் இரவு 9மணிவரை நடைபெறுவதாகவும்,இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது, [ச]

## மறியல்போராட்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

1000 மீற்றர் பாதுகாப்பு வலயப் பிரகடனம். இராணுவமுகாம் ஆகியவற்றை வாபஸ் பெறுமாறு கோரி இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வை. எம், சி. ஏ. சந்தியிலிருந்து வீடமைப்பு இலாகா வரை வீதி போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டிருந்தது.

ஊர்வலமாக வந்த யாழ். வர்த்தக சங்கத்தினரும். மாணவர்களும், மற்றும் பொதுஸ்தாபன பிரதிநிதிகளும் சமூகத்தின் பல்வேறு துறையைச் சேர்ந்தவர்களும் திருமலை, வவனியாவிலிருந்து வந்த அகதிகளும் வீதியில் இருந்து மறியல் செய்தனர்

சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகத்தினர் மறியலில் கலந்து கொண்டவர்களுக்கு குளிர்பானம் வழங்கினார்கள்.

யாழ். குடாநாடு எங்கும், இன்று ஒலிபெருக்கி மூலம் மறியல் போராட்டம் பற்றி பொதுமக்களுக்கு விளக்குதற்கும் ஆதரவு திரட்டுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது,

மறியல் போராட்டம்இன்று செயலகம் முன்பாக மட்டுமின்றி யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர், அலுவலகம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், யாழ் கல்வித்திணைக்களம் ஆகியவற்றின் முன்பாகவும் நடைபெறும்.

அன்னையர் முன்னணிநேற்று அவசரமாகக் கூட்டிய ஆலோசனைக்கூட்டத்தில் மேற்கண்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

யாழ், கச்சேரி முன்பாக மறியல் போராட்டம் நடை இப்போராட்டத்தினை ஒழுங்கு செய்த அன்னையர் முன்னணியினர் இப்போராட்டத்தில் பங்குபற்றிய தமிழ் மகளிர் அவை, சங்கிலியன் புனர்வாழ்வுக்கழகம், யாழ். வர்த்தக சங்கம், ஈச்சமோட்டை சனசமூக நிலையம் மற்றும் பொதுஸ்தாபன முக்கியஸ்தர்களை அழைத்து மறியல் போராட்டத்தை எவ்வாறு விரிவுபடுத்துவதென அவசரமாகக் கூடி ஆராய்ந்தபோதே மேற்படி முடிவு செய்யப்பட்டது [க-ஐ]


வீடியோ பிரசாத்தின்

**இன்றைய வெளியீடு**

K. R. விஜயாவின்
**''சமயபுரத்தாளே சாட்சி''**
[தரமான பிரதி]

**வீடியோ பிரசாத்**
232, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[A-131]



**வேண்டுகோள்**

தண்ணீரூற்றைச் சேர்ந்த பழைய விதானையார் திரு. பொன்னையா செல்வநாயகம் 29-07-85 இரவு இனந்தெரியாதவர்களினால் கடத்தப்பட்டு இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. எனவே சம்பந்தப்பட்டவர்கள் அவரை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறு அல்லது அவரைப்பற்றிய தகவலைதயவு செய்து உறவினர்களுக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

திரு. சிவராசாவும், உறவினர்களும்.
(C 344)


## லெப்டினன்ட்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படித் தாக்குதலில் பலியானதாக அரசவட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன .

இச்சம்பவம் நேற்று முன்தினம் நடந்தது. [பி]

## பூரண கடையடைப்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்துக்கருகில் ஒன்றுகூடினர். அங்கிருந்து ஊர்வலமாகச் சென்று யாழ். செயலகத்தை அடைந்தனர்.

யாழ். செயலக முன்றலில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அன்னையர் முன்னணிக்கு ஆதரவாக வர்த்தகர்களும் தொழிலாளர்களும் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### மகஜர் கையளிப்பு

அரசாங்கம் எமக்கும் எமது மக்களுக்கும் மாற்று இடமும், கட்டிடங்களும் இந்தப்பாதுகாப்பு வலயத்துக்கு அப்பால் நிறுவித்தராது இப்பாதுகாப்பு வலயத்தில் இருந்துநாம்வெளியேறுவது முடியாதகாரியம். இப்படி ஒரு மாற்றுத்திட்டம் உருவாகிய பின்னரே வெளியேறலாம்'' என்று யாழ். வர்த்தகசங்கம் யாழ் அரசாங்க அதிபரிடம் நேற்று சமர்ப்பித்த மகஜரில் தெரிவித்துள்ளது.

வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டிருந்ததால் வியாபாரம் நடக்கவில்லை சந்தைகள் கூடவில்லை சனநடமாட்டம் மிகக் குறைதாகவே இருந்தன. பாடசாலைகள் நடைபெற்றபோதிலும் அங்கு மாணவர்கள் வரவு குறைவாகவே இருந்தது

### பல்கலைக்கழகமாணவர்

யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் நேற்று வகுப்புக்களை பகிஷ்கரித்தனர்.

மாணவர்களின் பகிஷ்கரிட்பு நடவடிக்கையினால் விரிவுரைகள் ஒன்றும் நடைபெறவில்லை விரிவுரைகளுக்கென வந்த மாணவமாணவிகளும் பல்கலைக்கழக வாசலில் நின்று விரிவுரையாளர்களைஉட்செல்லவிடாது தடுத்தனர் இதனால் விரிவுரையாளர்கள் சிறிது நேரத்தில் வீடுதிரும்பினர். விரிவுரைகள் ஸ்தப்பிதமடைந்தன இதனை அடுத்து மாணவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து புறப்பட்டு யாழ்செயலகம் முன்பாக நடைபெற்ற மறியல் போராட்டத்தில் குதித்தனர்.

இதுதொடர்பாக மாணவர் அவை வெளியிட்டுள்ள அறிக்கையில் ''இப்பாதுகாப்பு வலயச் சட்டத்திற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்பை தெரிவிக்கும் அதே வேளையில் இச்சட்டத்தினால் தமிழ்பேசும்மக்கள் எதிர்நோக்கியுள்ள பல்வேறுபாதுகாப்பு பிரச்னைகளுக்கு முடிவு கட்டும் வகையில் அன்னையர் முன்னணி மேற்கொண்டுள்ள மறியல் போராட்டத்திற்கு தொடர்ந்தும் பூரணஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கவுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. [ஐ-ச]

# முதல் நாள் மறியல் 250 பெண்களுடன் ஆரம்பம்

-கா. யோகநாதன்-

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகம், பழைய கச்சேரி, வீடமைப்புத் திணைக்கள வாசல்களில் நேற்றுக் காலை 1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தையும், யாழ். கோட்டையிலிருந்து இராணுவத்தினரை வாபஸ்பெறக்கோரியும் சுலோக அட்டைகளுடன் சுமார் இருநூற்று ஐம்பது பெண்கள் மறியல் போராட்டத்தை ஆரம்பித்தார்கள்.

'அன்னையர் முன்னணி' 'தமிழ் மகளிர் அவை'த் தொண்டர்கள் 'சங்கிலியன்' புனர்வாழ்வுக்கழக மகளிர் தொண்டர்கள் மற்றும் மகளிர் அமைப்புக்கள் இந்த மறியலில் கலந்துகொண்டனர்.

நேற்றுக்காலை 7-15 மணிக்கு முதல் முதல் ஒரு பெண்மணி வந்து பழைய கச்சேரியில் மறியலை ஆரம்பித்தா .அதன் பின் காலை 8 மணிவரை அன்னையர் முன்னணியினர் பல இடங்களிலிருந்து வந்து கலந்து கொண்டனர்.

## சுலோக அட்டைகள்

புதிய செயலகக் [கச்சேரி] கொடிக்கம்பத்தில் கோட்டை இராணுவம் வாபஸ்பெற வேண்டும் என்றும், 1000 மீற்றர் பாதுகாபபு வலயத்தை வாபஸ்பெறவேண்டும் என்றும் இரு சுலோக அட்டைகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

புதிய செயலக வாசலில் சுமார் நூற்றுக்குமேற்பட்ட பெண்கள் மறியல் செய்தனர். இதில் வயோதிபத் தாய்மார்களும் காணப்பட்டனர்.

பழைய கச்சேரி வாசலில் சுமார் 60 பெண்கள் மறியலில் ஈடுபட்டனர், வீடமைப்புத் திணைக்கள வாசலில் சுமார் 80 பெண்கள் மறியலை ஆரம்பித்தனர். நேரம் செல்லச் செல்ல மேலும் பலபெண்கள் கள் சேர்ந்து கொண்டனர்.

''அரசாங்கமே ஈழவரை விடுதலை செய்'' 'போராளிகள் அனைவரும் ஒன்றுபட வேண்டும்'' ''இராணுவமே கோட்டையை விட்டு வெளியேறு'' ''எமது வைத்திய சாலையில் கைவைக்காதே'' போன்ற பல சுலோகங்களை வைத்திருந்தனர்.

## திணைக்களங்கள் இயங்கவில்லை

இப்போராட்டத்தினால் செயலகம் பதிவு காரியாலயம், சமூகசேவைப் பகுதி, ஆள்பதிவுத் திணைக்களம், மோட்டார் வாகன திணைக்களம், சிறு கைத்தொழில் திணைக்களம், உணவுக் கட்டுப்பாட்டு இலாகா, கமநல சேவை திணைக்களம், நில அளவையாளர் பகுதி, தேர்தல் கந்தோர், குடிவரவு-குடியகல்வு திணைக்களம், பிறப்பு இறப்பு அத்தாட்சி விண்ணப்பப் பகுதி, கடவுச்சீட்டு பகுதி, வீடமைப்பு இலாகா, பனம்பொருள் திணைக்களம், மதிப்பீட்டு இலாகா, காட்டு இலாகா, உள்ளூராட்சி இலாகா. வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, கைத்தொழில் அபிவிருத்தி பகுதி, இளைஞர்சேவை பகுதி ஆகியவை இயங்கவில்லை இப்பகுதிகளைச் சேர்ந்த சுமார் 2000 ஊழியர்கள் கடமையாற்றவில்லை.

## சம்பளம் கிடைக்கவில்லை

நேற்று ஊழியர்களின் சம்பள தினமாகும் மறியல் போராட்டத்தினால் ஊழியர்கள் சம்பளம் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஒருபகுதி ஊழியர்கள் காசோலை மூலம் சம்பளத்தை ஏற்கனவே பெற்றிருந்தனர். சுமார் 500 ஊழியர்கள் சம்பளம் பெறவில்லை என்றும், காசோலை எல்லாம் தயாரென்றும், சம்பளப் பட்டியல் உள்ளே இருப்பதாகவும், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் தெரிவித்தார்.

## முன்னணியினர் தடுத்தனர்

நேற்றுக்காலை 8 மணியளவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆர். கோபாலரத்தினமும் மற்றும் சில ஊழியர்களும், புதுயவாசலுக்குவந்து உள்ளே செல்ல முற்பட்ட போது, அங்கு மறியல்செய்த முன்னணியினர் அவர்களை போகவிடாமல் தடுத்து, கோட்டை இராணுவம் வாபஸ் பெறுமவரை உள்ளே செலல விடமாட்டோம் என்றனர். சிலநிமிடங்கள் அவர்கள் நின்றுவிட்டு திரும்பிச் சென்றனா.

உதவி அரசாங்க அதிபர் திரு. ஜி. பி. பாலசிங்கம், மேலதிக பதிவாளர் திரு.எல். இராசையா மற்றும் இலாகா தலைவர்களும் அங்குவந்திருந்த போதிலும் எவரும் செல்லவில்லை.

## பொதுமக்களும் ஆதரவு

அரசாங்க ஊழியர் சகலரும், கச்சேரிமுன் வீதி ஓரங்களில் காணப்பட்டனர். பெருந்திரளான பொதுமக்களும், மறியலுக்கு ஆதரவுதெரிவித்து

[7-ம் பக்கம் பார்க்க]


"நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்தும்போது உடல்வலி ஏற்பட்டால் உடனடி நிவாரணம் தருகிறது பனடோல்"

செல்வி வாசுகி சண்முகம்பிள்ளை.
பரதநாட்டியத்தாரகை.






வலிக்கும் காய்ச்சலுக்கும் எதிரான, ஒவ்வொருவரும் நம்பக்கூடிய நிவாரணி.

பனடோல் வலிக்கும் காய்ச்சலுக்கும் எதிரான நிவாரணி, அது நங்கையர் நலக்குறைவுக்கும், உடல்வலி வேதனைகளுக்கும் நிவாரணம் தருகிறது பனடோல் அதிமென்மையான வயிற்றைக் கூடப் பாதிக்காத துரித நிவாரணி என்பதால்தான் உலகெங்குமுள்ள டாக்டர்கள் பனடொலைச் சிபாரிசு செய்கிறார்கள்.

விலை - வில்லையொன்று 50 சதம்

தயாரித்து விநியோகிப்போர்.
மக்வூட்ஸ்-விந்த்ரெப் லிமிட்டெட்

# பனடோல்

துரிதநிவாரணி... அது வயிற்றைக் கூடப்பாதிப்பதில்லை.

JWT MW 1762



சங்கானை நிகரை ஞான வயிரவர் ஆலயத்தில் நடைபெற்ற மரம் நாட்டு விழா வைபவத்தில் தொழில் அதிபர் திரு. க. கனகராசா மரம் நாட்டுவதையும் அருகில் பரிபாலன சபையைச் சேர்ந்த திரு. ஆ. ஞானசேகரம், திரு மு. நவரத்தினராஜா, திரு. செ. சிவஞானம், ஆகியோருடன் கமநல சேவைகள் திணைக்கள பிரதம கணக்காளர் திரு. ஏ. முத்துலிங்கம், சங்கானை கிழக்கு பயிர்ச் செய்கை அதிகாரி திரு. ஜீ. சிதம்பரநாதன் ஆசிரியர் திரு. சாம்பசிவம் ஆகியோரையும் இங்கு காண்கிறீர்கள்.

# மார்க்க பணி புரிந்து...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)
பொழிவாற்றுவதுப் கேட்க இனிமையிலும் இனிமை.

## நடுநிலைநின்று

நிமிர்ந்த மேனியும் பொலிந்த முகமும் பூரித்த உள்ளமும் நிலத்தினில் யாரும் அஞ்சா நெறிகளும் எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கும் திண்ணிய ஆற்றலும் வீரமும் வெற்றியும் பலரின் அன்பும் நட்பும் அன்னாருக்கு சமூகத்தில் பெரு மதிப்பைத்தந்தன. எவ்வித மான பிரச்னையாக இருந்தாலும் நடுநிலைநின்று தீர்ப்புக் கூறும் நீதிபதியாக விளங்கினார்கள். இஸ்லாத்தின் நான்கு அடிப்படை அம்சங்களான குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ கியாஸ் வழிநின்று நெறிபிறழாது தனது தீர்ப்பினை வழங்குவார்கள் அதுமட்டுமல்லாமல் சிறந்த சமூகத் தொண்டனாகவும் விளங்கினார்கள். முஸ்லிம் வட்டாரத்தில் நடைபெறும் சமூக, சன்மார்க்க, அரசியல் நிகழ்ச்சிகள் எதுவாக இருந்தாலும் அன்னாரின் தலைமையிலேயே நடைபெறும். அத்தகைய தலைமைத்துவத்தகமை அன்னாரிடம் காணப்பட்டது. எடுக்கப்பட்ட விடயத்தை தனித்துவமான முறையிலும் ஆணித்தரமாகவும் குர்ஆன் விளக்கத்துடனும் தரக்கூடிய ஆற்றல் அன்னாரிடம் காணப்பட்டது. குறிப்பாக முஸ்லிம் சமூக நிகழ்ச்சிகள் மட்டுமல்லாது அனைத்து சமூக நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார்கள்.

1952ம் ஆண்டு இலங்கை வானொலியில் ஆலிம் அவர்கள் திருக்குர்ஆன் விரிவுரையாளராக சோதித்துக் கொள்ளப்பட்டார்கள். கடந்தவருடம் அன்னார் இறையடிசேரும்வரையில் இலங்கை வானொலியில் தொடர்ந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளார்கள்.

இறை தூதர் நபிமுகமது [ஸல்] அலைகிவஸல்லம் அவர்களின் பின் இன்னொரு நபி பிறக்மாட்டார் என்றநம்பிக்கையின் அடிப்படையில் அகிலம் முழுவதும் இறைதூதை மக்கள் மத்தியில் எத்திவைக்கும் பொறுப்பு ஒவ்வொரு முஃமினதும் கடமையாகின்றது. இந்தவகையில் யாழ்ப்பாண மாவட்டத்தின்தப்லீஃ ஜமா அத்தின் அமீராக அன்னார் கடமையாற்றியுள்ளார்கள். அத்துடன் இம்மாவட்டத்தின் தப்லீஃ ஜமா அத்தின் ஆயுட்காலத் தலைவராகவும் நௌரவிக்கப்பட்டார்கள்.

அனைத்து சமூகத்து மக்களும் அன்னாரைக் காண்டதற்கு அவரது இல்லத்திற்கு தினசரி வந்து போவார்கள். யாழ் மாவட்டத்தில் உயர் பதவிகளுக்கு நியமனம் பெற்று வரும் அதிகாரிகள் நீதிபதிகள் போன்றோர் அன்னாரிடம் நல்லாசிசளைப் பெறுவதற்பொருட்டு சமூகம் தருவார்கள். இவ்வாறு எல்லாம்வல்ல

(8 ம் பக்கம் பார்க்க)

# ரூ. 1 லட்சம் உணவுப்பொருள் ஓமந்தையில் அபகரிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரிலுள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு லொறியில் வந்த சுமார் 1 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் ஓமந்தையில் வைத்து இனந்தெரியாதவர்களினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

அரிசி, உருளைக்கிழங்கு, புளி, வெங்காயம், பூடு ஆகியனவே கொள்ளையடிக்கப்பட்டனவாம்.

பொருட்களை அபகரித்தபின்னர் லொறி அனுதரவாக ஒரு இடத்தில் விடப்பட்டிருந்தது. இக்கொள்ளைபற்றி யாழ்ப்பாணம் வர்த்தக சங்கத்திற்குப் புகார் செய்யப்பட்டுள்ளது. [க]

# இன்றைய பலன்

மாதம்; தை
திகதி: 10 [1986-1-23]
கிழமை: வியாழன்
திதி: திரயோதசி பின்இரவு வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் முற்பகல்வரை

மேடம்: பிறருக்கு உதவுவதில் முன் நிற்பீர்கள். பொதுத்துறையில் ஈடுபடுவோருக்கு நல்ல நாள். இதயத்திலும் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும்.

இடபம்: தாமத குணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம். வீண்பழி கேட்கவும் நேரிடும். உற்சாகம் குன்றும். உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

மிதுனம்: தொழில்துறையில் பூசகள் தோன்றி மறையலாம். உடல்நலமும் குன்றும். சுகாதாரம் வேண்டும்.

கடகம்: குடும்ப நலனும் குறிக்கோள் வெற்றிக்கும் இடமுண்டு. மாணவர்களுக்கு உஷாரான தினம். நண்பராலும் நன்மையுண்டு.

சிங்கம்; தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும், கடந்தகால எண்ணங்கள் அலைமோதும். சகோதர வழியால் சஞ்சலமுண்டு.

கன்னி; தடைப்பட்ட காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும் தாய்வழிப் பெருமையும் உண்டு. வாழ்வில் நலமுடன் வாகன சுகமுமுண்டு.

துலாம்: தொழிலும் சிறக்கும். தொல்லைகளும் பறக்கும். வாழ்விலும் வசதி பெருகும் தொழில் ஆரம்பிப்பதற்கு நன்னாள்.

விருச்சிகம்; வீணான சிந்தனைக்கு இடமளியாது இருக்கவும். திடீர் இடமாற்றங்களும் இடம்பெறலாம். குடும்பச் சச்சரவுகளும் இடம்பெறும்,

தனுசு: களஸ்திர சுகமும் உண்டு கண்ணியமும் சேரும் காதலர்களுக்கும் நன்மை பிறக்கும். குடும்பத்திலும் நன்மையான விடயங்களுக்கு திட்டமிடப்படலாம்.

மகரம்; அக்கினி பிணி உண்டு. எதிரிகளும் எக்காளமிடுவர் சிறுவிபத்துக்கும் இடமுண்டு. நன்மை செய்யப் போய் குறைகேட்க நேரிடும்

கும்பம்: பிதாவழியாலும் நற்செய்தி கிட்டும். சுற்றுடலிலும் மதிப்புக்கு இடமுண்டு. ஸ்தல யாத்திரையும் மேற்கொள்ளப்படலாம்.

மீனம்: ஆராய்ச்சியாளர்களுக்கு சிறப்பான தினம். வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு. மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

திருமலை
வே. ரவீந்திரன்

# முதல்நாள்

(6ம் பக்கத் தொடர்ச்சி)
அவ்விடத்தில் காணப்பட்டனர்.

## வயோதிபர் உள்ளக் குமுறல்

கோட்டைக்குமுன்பாக மறியல் செய்ய என்பின்னால் நூறு பேர் வந்தால் நான்தலைமை தாங்கிச் செல்ல தயார் என்று கூறிக்கொண்டு யாழ். கச்சேரியடியைச் சேர்ந்த 87 வயதான திரு.சொலமன் கைப்பொல்லை ஊன்றிக் கொண்டு மெல்ல மெல்ல நடந்துவந்தார். அவர் கையில் ஒரு சுலோக அட்டை இருந்தது. அதில்இராணுவமே வாபஸ்பெறு என எழுதப்பட்டிருந்தது.

அவர் புதிய கச்சேரி வாசலில் தெற்குப் புறத்தில் ஒரு ஸ்ரூலில் அமர்ந்திருந்தார்.

## தினசரி நடைபெறும்

கச்சேரி மறியல் தினமும் காலை 8 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை தொடர்ந்து நடைபெறும் என்றும் அன்னையர் முன்னணியினர் தெரிவித்தன. [க]

# திருப்பணி வேலைகள்

[யாழ்ப்பாணம்]

காரைநகர் 'ஈழத்துச் சிதம்பரம்' சிவாலய சிவன், ஐயனார் இராசகோபுர திருப்பணி வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. திருப்பணிக்கென, இதுவரை பலர் நிதியுதவி அளித்துள்ளனர்.


# சமுத்திரா மல்ரி சேவிசஸ்

வழங்கும்

பன்முகப்படுத்தப்பட்ட சேவை விபரங்கள்:-

1. திருமணசேவை:

★ டாக்டர்கள் ★ எஞ்ஜினியர்கள் ★ எக்கவுண்டன்ஸ் ★ பட்டதாரிகள்
★ பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ★ வங்கி ஊழியர்கள் ★ வர்த்தகர்கள்
★ விவசாயிகள் ★ விவாகரத்துப் பெற்றவர்கள்
தாரமிழந்தோர் ★ வயதுவந்தோர் வரை
சகல தரத்திலும் மணமக்கள் எம்மிடம் இருக்கிறார்கள்.

2. காணி / வீடு வாங்கி விற்கும் சேவை:

யாழ் குடாநாட்டின் சகல பகுதிகளிலும் காணி / வீடு வாங்குதல். விற்றல்

3. மின்சார உபகரணங்கள் தளபாடங்கள் } வாங்கி விற்கும் சேவை

வெளிநாடு செல்வோர். பாவனையில் இல்லாது மேலதிகமான பொருட்களை விற்க விரும்புவோர் நியாய விலையில் விரைவாக விற்பதற்கு எங்கள் சேவையை நாடுங்கள்.

4. கட்டிட வேலைப்பகுதி:

1. ARCHITECTURAL DESIGNERS
2. ENGINEERS AND CIVIL ENGINEERS CONTRACTORS
3. RENOVATIONS
4. MAINTENANCE
5. REPAIRS

5. உபசேவைகள்:

1. காணி அளவிடுதல், பிரிவிடுதல் ஆகியவற்றுக்கான உத்தரவு பெற்ற நில அளவையாளர் சேவை
2. வீட்டுக்கு நிலம் எடுத்தல்.
3. விவாகப்பொருத்தம் பார்த்துக் கொடுத்தல்
4. வயரிங் வேலைகள் ஒப்பந்த அடிப்படையில்
5. சட்ட ஆலோசனைகள்

6. சிறு உற்பத்தியாளர்களுக்கான சேவை:

உங்கள் தொழில் நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் தரமான பொருட்களை மக்கள் மத்தியில் பிரபல்யம் அடையச்செய்வதற்கு அனுபவம்மிக்க எமது பிரதிநிதிகள் மூலமாக விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

விசேட ஒழுங்குகள்:

★ திருமணங்கள் ★ பிறந்தநாட் கொண்டாட்டங்கள்
மற்றும்
வீட்டில் பொது இடத்தில் நடைபெறும் எந்த வைபவங்களுக்கும்
★ படப்பிடிப்பு ★ வீடியோ படப்பிடிப்பு ★ ஒலி ஒளி அமைப்பு
ஆகிய உபசேவைகளும் எம்மால் செய்து தரப்படும்
உங்கள் தேவை எதுவாக இருந்தாலும் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்
உங்கள் தேவை ! எங்கள் சேவை !!

தொடர்பு முகவரி:

சமுத்திரா மல்ரி சேவிசஸ்

தலைமை அலுவலகம்: 303, பலாலி றோட் கோண்டாவில் சந்தி, கோண்டாவில்.

கிளை நிறுவனங்கள்:
முருகமூர்த்தி லேன் நெல்லியடி, கரவெட்டி.
கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பழை. (ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு சமீபமாக.)

(A 128)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## 90 பேரையும் விடுவிக்கக் கோரிக்கை

(கல்முனை)


வீரமுனையிலும் சொறிக் கல்முனையிலும் கைதுசெய்யப்பட்ட தொண்ணூறு பேரையும் விடுதலை செய்யுமாறு கல்முனை பிரஜைகள் குழுவினர் அம்பாறை இராணுவ முகாம் பொறுப்பதிகாரியிடம் நேற்று வேண்டுகோள் விடுத்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மீதான விசாரணை தற்போது நடைபெற்று வருவதாகவும் இந்த விசாரணைகள் மூன்று நாட்களுக்கு தொடர்ச்சியாக நடைபெறுமெனவும் அதன் பின்னர் பயங்கரவாத நடவடிக்கையுடன சம்பந்தப்படாதவர்கள்விடுதலை செய்யப்படுவார்களெனவும் பிரஜைகள் குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-ய)

## தமிழ்-முஸ்லிம் ஒற்றுமைக்கூட்டம்

(கொழும்பு)

சம்மாந்துறை, வீரமுனை, சொறிக்கல்முனை ஆகிய பகுதிகளில் வாழும் தமிழ்முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையையும் நல்லெண்ணத்தையும் ஏற்படுத்தும் நோக்குடன் அந்தப்பகுதிகளில் தமிழ்-முஸ்லிம் பிரமுகர்கள் ஒற்றுமைக்கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர் [ச-ய]




அன்னையர் முன்னணியின் மறியல் போராட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள். செயலகம் முன்பாக சுலோகஅட்டைகளுடன் அன்னையர் முன்னணியினர் நிற்பதை இங்கு காணலாம். (படங்கள்: 'தேவா')

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணசாமிக்குருக்கள் தர்மாம்பாள்

சங்கானை மகாதேவபிள்ளையார் கோவில் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ கிருஷ்ணசாமிக்குருக்களின் மனைவி தர்மாம்பாள் 19-1-86 ஞாயிறு சிவபதமடைந்துவிட்டார். அன்னார் கொழும்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் சண்முகரத்தினக்குருக்கள், சங்கானை மகாதேவபிள்ளையார் கோயில் கைலாசநாதக்குருக்கள், சிரணி நாகபூசணிஅம்மன் கோயில் பாலகிருஷ்ணகுருக்கள், ஓமான் கனேசராஜன், ஓமான் திருமதி சுந்தராம்பாள் விக்னேஸ்வரன், யாழ். கலட்டி அம்மன் கோயில் திருமதி நாகலட்சுமி கருணாகரேஸ்வரக்குருக்கள், பெரியவிளான், இளவாலை திருமதி சந்தானலட்சுமி தர்மராஜாசர்மா, சங்கானை சர்வேஸ்வரி ஆகியோரின் தாயாருமாவார். அன்னாரின் தகனக்கிரியை 23-1-86 வியாழன் காலை 10 மணியளவில் சங்கானை விழாவெளி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்; ஷண்முகரத்தினக்குருக்கள். [C 343]

### சின்னத்துரை மகேசன்

கொட்டடி வாசியும் தற்போது பலாலிவீதி (பாம்ஸ்கூல் முன்) திருநெல்வேலியில் வசிக்கும் திருமனப்புவி சிங்கம் சின்னத்துரை மகேசன் (இளைப்பாறிய அரசாங்க லிகிதர்) காலமானார். இவர் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும், சந்திரலேகா, கதிர்காமநாதன் அரசபெருந்தோட்ட கூட்டுத்தாபனம்), லோகநாதன் தேசிய சேமிப்பு வங்கி, முன்னாள் லிகிதர்), நித்தியலட்சுமி, ஜெகநாதன் (சவுதி), பத்மநாதன் (U K), பரிமளநாதன் (நோர்வே), ரவீந்திரநாதன் (நோர்வே). மாலினி (மாணவி, வேம்படி மகளிர் பாடசாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும், மாணிக்கவாசகர்(பொறியியலாளர் ஓமான், சரோஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், துபினுவின் பாட்டனாரும், இராசையா (கணக்காளர், நிதிஅமைச்சு) அவர்களின் மைத்துனருமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-1-86 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று கோண்டாவில் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

மனைவி, பிள்ளைகள்.

பலாலிவீதி, திருநெல்வேலி. [C-346]

### குட்டித்தம்பி சின்னத்தம்பி

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த குட்டித்தம்பி சின்னத்தம்பி (மலாயன் பென்சனியர்) 22-1-86ல காலமானார். இவர் அரசம்மவின் அன்புக்கணவரும் மனோன்மணி, நடராஜா (ஓமான்), சரஸ்வதி (லண்டன்), காலஞ்சென்ற பத்மாவதி, நடேசலிங்கம் (ஓமான்), யோகேஸ்வரி (ஓமான்) ஆகியோரின் அன்புத்தந்தையும் தேவசுந்தரம் (கோண்டாவில் தம்பி 'கராஜ்'), நாகேஸ்வரி, ராஜகுலராஜசிங்கம் (லண்டன்), ராஜலட்சுமி, விவேகானநதராஜா (ஓமான்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தயாவதி, தனம்ஜெயன், சிவலோகநாதன் சசிகலா, ஞானப்பிரகாசம் மதனகலா, விவேகானந்தராஜா, ஜீவகலா, ஜெயசாந்தன், சுவிர்தகலா, சுதர்சன், சுஜீவன், ரேகா, கௌரி சிவானி, செந்தி, செந்தூரன், கஜந்தினி, அபிராமி, யசிந்தா, சஞ்ஜீவ் ஆகியோரின் பாட்டனாரும், சசிலேகா, காயத்திரி, கார்த்திக்கா, அருள் ஆகியோரின் பூட்டனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-1-86 வியாழக்கிழமை பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று இளங்காட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தேவசுந்தரம்
தம்பி 'கராஜ்'

C 345

## பிரிட்டிஷ் பெண் கடத்தல் 'ஈரோஸ்' தரும் விளக்கம்

[சென்னை]

"முல்லைத்தீவில், வெள்ளைக்காரப்பெண்ணை நாங்களே கடத்தினோம் அவரைத்தேடிப் பிடிக்கும் நோக்குடன் அப்பாவிப் பொதுமக்களை அரசாங்கம் துன்புறுத்துமேயானால், அப்பெண்ணின் உயிருக்கும் நாம் உத்தரவாதமளிககமுடியாது"

இவ்வாறு முல்லைத்தீவில் அண்மையில் கடத்தப்பட்ட வெள்ளைக்காரப் பெண் பற்றி 'ஈரோஸ்' வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளது. சென்னையில் விடுக்கப்பட்ட அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த இப்பெண் பெனிலோப் வின்னி (வயது 50) என்று நாம் அடையாளம் கண்டுள்ளோம். இவர் ஒரு பத்திரிகையாளராயினும், தான் வேலைசெய்யும் நிறுவனத்தின் உரிமையாளரின் பெயரைக்கூறவில்லை. இப்பெண் உளவுப் படையைச் சேர்ந்தவரா என்பதை அறிவதற்காக நாம் இவரை விசாரித்துவருகிறோம். நிரபராதியாகக் காணப்படும் பட்சத்தில் இவரை நாங்கள் விடுவிப்போம். இப்பிரதேசம் எமது கட்டுப்பாட்டிலேயே இப்போதுஉள்ளது. அரசின் கட்டுப்பாட்டில் அல்ல. இப்பிரதேசத்தினுள் நுழைய விரும்பும் எவரும் எமது அனுமதியைப்பெற்றே நுழைய வேண்டும்"

இதனிடையே இலங்கை பந்தோபஸ்து அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தகவல் தருகையில், இப்பெண்ணின் சொந்த நாடோ. பெயரோ தெரியவில்லை என்றும் இப்பெண் கடந்த பதினெட்டாம் திகதி முதல் காணாமல்போய்விட்டார் என்றும் கூறினர். (ய. செ.)

## கடலில் வைத்து சூடு: கடற்றொழிலாளி பலி!

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் கடலில் வைத்து கடற்றொழிலாளி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியானார். படகில் வந்த மற்றொருவர் காயமடைந்தார்.

மயிலிட்டியிலிருந்து படகில் வடமராட்சி பகுதிக்குச் சென்று கொண்டிருந்தபோது கடற்கரையில் நின்ற சீருடையினர் படகை நோக்கி சுட்டதாகக் கூறப்படுகிறது. [க]

## மூவாயிரம் கையொப்பங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கச்சேரியில் நேற்று நடைபெற்ற மறியல்போராட்டத்தில் பங்கு பற்றிய அனைவரிடமும் கையொப்பங்கள் வாங்கப்பட்ட இவ்வாறு வைக்கப்பட்ட கையொப்பங்கள் சுமார் மூவாயிரத்துக்கு அதிகமாகும். (ஐ)

## செங்கலடி சம்பவம்

[ஏறாவூர்]

செங்கலடியில் நேற்றுக்காலை பொலிஸ் ஜீப் வண்டி ஒன்றுக்கு வைத்த நிலக்கண்ணி வெடி குறிப்பிட்ட இடத்தை ஜீப்வண்டி அடைவதற்கு முன்னரே வெடித்ததினால், பொலிசாருக்கு எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியிலுள்ள ஓலைக் குடிசை ஒன்று சாம்பராக்கப் பட்டுள்ளது.

அப்பகுதிமக்கள் பீதியினால் குடிபெயர்ந்து வேறு இடங்களுக்கு சென்றதாகவும், பதற்றம் தணிந்ததைஅடுத்து மாலையில் தத்தம் வீடுகளுக்குத் திரும்பியதாகவும் கூறப்படுகிறது. இது தொடர்பாக ஒருவர் கைதுசெய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். [ச-ய]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

## மரண அறிவித்தல்


### திருமதி பவானி விசாகப்பெருமான்

கலாநிதி வி. இராமச்சந்திரன், காலஞ்சென்ற திருமதி கிருஷ்ணமணி கதிரேசு அவர்களின் அருமைத் தாயார் நயினாதீவு திருமதி பவானி விசாகப்பெருமான் அவர்களின் தகனக்கிரியைகள் 21-01-86 செவ்வாய்க்கிழமை பிற்பகல் நயினாதீவில் நடைபெற்றது என்பதனை உற்றார் உறவினர்களுக்கு அறியத்தருகின்றோம்,

தகவல்: செ. விசாகப்பெருமான்.
(கணவன்)

C 347

### அருள்திரு. வீரகத்திப்பிள்ளை ஆர்.தார்சீசியஸ் (OMI)



அருள்திரு. வீரகத்திப்பிள்ளை ஆர். தார்சீசியஸ் (OMI) காலமானார். இவர் தொண்டைமானாற்றைச் சேர்ந்த காலஞ்சென்ற பிரபலவர்த்தகர் வீரகத்திப்பிள்ளையின் மகனும். காலஞ்சென்ற மலாயன் பென்சனர் வீ. சுப்பையா (ஜே. பி), அமரர் வைத்திய அதிகாரி துரைசாமி, அமரர் வர்த்தகர் இராசரத்தினம், அமரர் ம. செல்லமுத்து, வீரகத்திப்பிள்ளை அன்சன்ஸ், சேகரம் அன்சன்ஸ் உரிமையாளர் வீ. இராசரத்தினம் (ஜே. பி) அவர்களின் சகோதரருமாவார் அன்னார் பேசாலை, முருங்கன, நாவாந்துறை, மானிப்பாய், ஊர்காவற்றுறை. மயிலிட்டி ஆகிய இடங்களில் குருத்துவசேவையாற்றி, கொழும்புத்துறை "அமல உற்பத்தின்" குருக்களின் முதியோர் இல்லத்தில் தமது இறுதிக் காலத்தைக் கழித்தார். அன்னாரது இறுதிச்சடங்கு இன்று (23-01-86) மாலை 3-45 மணியளவில் புனித மரியாள் பேராலயத்தில் நடைபெறும். (C 341)